# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.136/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.செல்வம்** |
| **Husband's Name** | : **மாயத்தேவர்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.11.2019

மு.வி:

நான் செக்கானூரணியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 5 ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். கையெழுத்து போடதெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். 11.05.2010 ஆம் தேதி நான் முண்டுவேலம்பட்டிக்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது செல்லம்பட்டி பஸ் ஸ்டாண்ட் அருகே நானும் ரமேஷ்சும் இரவு 10.30 மணி அளவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். செக்கானூரணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அந்த இடத்தை படம் வரைந்து கொண்டிருந்தார். விசாரித்ததில் நகைக்கடையில் திருட்டு நடந்ததாக சொன்னார். அது சம்மந்தமாக வந்திருப்பதாக சொன்னார்கள். வரைபடம் வரைந்திருந்தார்கள். பின்னர் எழுதியிருந்த பேப்பரில் எங்கள் இருவரிடமும் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி: ( 1, 2, 5 எதிரிகள் சார்பாக)**

நானும் ரமேஷ்சும் முண்டுவேலம்பட்டிக்கு சென்று திரும்பி வரும்போது பேருந்து நிறுத்தம் அருகே நின்றபோது போலீசார் அங்கு விசாரித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு சார்பு ஆய்வாளர் மற்றும் ஒரு போலீசார் இருந்தார்கள். எனக்கு காவல் துறையின் சார்பு ஆய்வாளர் யார் ஆய்வாளர் யார் என்ற விபரங்கள் எனக்கு தெரியும். அன்றைய தினம் வந்த சார்பு ஆய்வாளர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. நகை கடையில் திருடியது சம்மந்தமாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரிதான். வேறு வழக்கு சம்மந்தமாக

என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. என்னோடு கையெழுத்து செய்த ரமேஷ் பண்ணியானை சேர்ந்தவர் சம்பவ சமயத்தில் அவர் கண்ணனூரில் வசித்து வந்தார். சம்பவ இடத்திற்கு தெற்கே யார் வீடு உள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு மேற்குபுறம் எதுவுமில்லை. போலீசார் விசாரணையில் நாங்கள் இருவரும் முண்டுவேலம்பட்டிக்கு சென்று திரும்பி வந்துகொண்டிருந்தோம் என்ற விபரத்தை சொன்னோமா என்றால் சொன்னோம். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் தழுவிக்கொள்கிறார்கள்)

ம.வி:

இல்லை.